முதன்மை உதவி அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,
முதன்மை உதவி அமர்வு நீதிபதி.

அ.சா.2 தேதி.03.12.2024

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 24/2023 | | |
| பெயர் | கமல்ராஜ் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(எதிரிகள் ஆஜர்).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் முலப்பாக்கம், தெற்கு தெருவில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். அ.சா.1, 3, 4, 5 ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளையும் எனக்கு தெரியும். சுமார் 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு, மாதம், தேதி சரியாக ஞாபகம் இல்லை. நான் காரைக்காலில் தங்கி இருந்தேன். காரைக்காலில் இருந்து நான் ஊருக்கு வந்த போது அக்கம், பக்கத்தில் இருந்தவர்கள் பிரச்சனை என்று கூற கேள்விப்பட்டேன். ஏதே பிரச்சனை என்று கேள்விப்பட்டேன் அவ்வளவு தான் தெரியும். சம்பவத்திற்கு பின்பு மயிலாடுதுறை போலீசார் வந்து அக்கம், பக்கத்தில் பிரச்சனை குறித்து விசாரணை செய்து கையெழுத்து வாங்கி சென்றார்கள்.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதியின் பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 25.06.2021 அன்று மாலை 5.00 மணியளவில் மயிலாடுதுறை, முலப்பாக்கம் தெற்கு தெருவில் எனது வீட்டு அருகில் நின்று கொண்டிருந்த போது ரிஷ்வானும், மணிவேலனும், ரிஷவாணின் மாமா, ராஜா வீட்டில் எதிரில் ரிஷ்வானின் அண்ணன் ரித்தீஸ் ஏன்டா என் தங்கச்சிகிட்ட பேசுற என்று காமகுரோதமாக திட்டி கீழே கிடந்த செங்களை எடுத்து அதனால் இத்தோடு ஒழிந்து போடா என்று சொல்லி மணிவேலன் தலையில் அடித்ததால், கீழே விழுந்த மணிவேலனை ரிஷ்வானின் அம்மா ராஜலெட்சுமி குச்சிகாரி மகனே என் மகளை தொந்தரவு செய்கிறார் என்று அங்கு கீழே கிடந்த கட்டையை எடுத்து மணிவேலை அடித்தார் என்றும், மணிவேலன் வலிதாங்காமல் சத்தம்

போடவும், நானும் தெருகாரர்களும் அங்கு சென்ற போது ரித்தீஸ் மற்றும் அவரது அம்மாவும் ஓடிவிட்டார்கள் என்றும், அவர்கள் அடித்ததில் மணிவேலனுக்கு தலையிலும், உடல் முழுவதும் காயம் ஏற்பட்டது என்றும், அவர் அப்போது தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவ மனையில் சேர்த்து உள்ளதாகவும், அவருக்கு உடல் நிலை சரியல்லாமல் மயக்க நிலையில் இருகிறார் என்றும், சம்பவத்தைை நேரில் பார்த்ததகாவும், மயிலாடுதுறை காவல் ஆய்வாளரிம் தெருகாரர்கள் அங்கு செல்லவில்லை என்றால் ரித்தீஸ் ம் அவரது அம்மா ராஜலெட்சுமியும் மணிவேலனை அடித்து கொலை செய்திருப்பார்கள் என்று கூறிவிட்டு, தற்போது எதிரிகளும் நானும் ஊரே ஊர் என்பதாலும், உறவினார்கள் என்பதாலும் தனக்கே தெரிந்த காரணத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.